# கலைத்துறைத் தங்கமகனை கௌரவித்துக் கொண்டாடிய ரசிகர்கள்!

தலைநகரில் அண்மையில் நடந்தேறிய கலை நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டுச் சொல்லும் சிறப்புகளுடன் அனைவரும் பாராட்டிய நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது டி.எம்.எஸ்.சிவகுருவின் பொன்விழா கலைப்படைப்பு.

கடந்த 15ஆம் நாள், செராஸ் பிஜிஆர்எம்மின் விசாலமான மண்டபத்தில் சுமார் 1000 ரசிகர்கள் முன்னிலையில் நடந்தேறிய அந்நிகழ்ச்சி ரசிகர்கள், கலைஞர்களின் பாராட்டைப் பெற்றது. 'மைனஸ் ஒன்' ஒலிப்பதிவு இசைக்குப் பாடும் கலைஞர்களின் பாடல்களைக் கேட்டு கொஞ்சம் சலிப்படைந்துபோன ரசிகர்களுக்கு, ஜூபிட்டர் இசைக் குழுவின் 11 இசைக் கலைஞர்கள் வழங்கிய உயிரோட்டமான இசைப் பின்னணியில் பாடப்பட்ட மணியான பாடல்கள் இசை ரசிகர்களுக்கு இன்னிசை விருந்தாக அமைந்தது.



தொழிலதிபர் டத்தோஸ்ரீ ஆர்.சந்திரசேகரன் பாடகர் டி.எம். சிவகுருவுக்குச் சிறப்புச் செய்து, முன்னின்று நடத்தி வைத்த இந்நிகழ்ச்சி, சிறப்பான ஒரு கலைநிகழ்ச்சி என்பதோடு நின்று விடாமல், பாடகர் டி.எம்.எஸ். சிவகுருவின் இசை வாழ்க்கையின் ஐம்பதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் அற்புதமான அறநிகழ்ச்சியாகவும் அமைந்து விட்டது போற்றுதலுக்குரியது.

இந்நிகழ்ச்சியின் வழி திரட்டப்பட்ட தொகையில் 10 ஆயிரம் வெள்ளி மலேசிய தேசிய சிறுநீரக அறவாரியத்துக்கு வழங்கப்பட்டது.

மூத்த இசைக் கலைஞர்கள் மூவரை சிறப்பித்து, பணமுடிப்பையும் வழங்கினார் டி.எம்.எஸ்.சிவகுரு. அமரர் செவ்விசைச் சித்தர் ரெ.சண்முகம் (அவரின் மகள் மலர்விழி பெற்றுக் கொண்டார்), முன்னாள் இசைமலர் இசைக்குழுவின் தலைவர் குழல் வேந்தன் பேரம்பலம், ஜூபிட்டர் இசைக் குழுவின் தலைவர் எஸ்.நல்லதம்பி ஆகியோரே அம்மூவர்.

நிகழ்ச்சியின் நாயகன் டி.எம்.எஸ்.சிவகுருவுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்தார் தமிழகத் திரைப் படப் பின்னணிப் பாடகர் 'நெஞ்சே உன் ஆசை என்ன?' தி.எல்.மகராஜன்.

நிகழ்ச்சிக்கு தங்க முத்திரைகளாக அமைந்தவை சிவகுருவின் செல்லமகள் ஷர்மிளா பாடிய 'சிங்கார வேலனே தேவா' என்ற 'கொஞ்சும் சலங்கை' படப் பாடலும் 'நீயே உனக்கு என்றும் நிகரானவன்' எனும் 'பலே




பாண்டியா' திரைப்பாடலுமாகும்.

நாதஸ்வர மேதை நினைவில் வாழும் காரைகுறிச்சி அருணாச்சலத்தின் நாதஸ்வர இசைப் பின்னணியில் எஸ்.ஜானகி பாடிய பாடல் 'சிங்கார வேலனே தேவா.' அப்பாடலை, அதே சுவையோடும் உணர்வோடும் மேடையில் வழங்கிட நாதஸ்வர கலைஞர் மருதுபாண்டி, தவில் வித்வான் ஜெகதீஸ்வரன் ஆகிய இருவரையும் தமிழகத்திலிருந்து வரவழைத்துதம் புதல்வி ஷர்மிளாவை மேடையில் பாட வைத்து ரசிகர்களை இசைமயக்கத்தில் ஆழ்த்தியது, சிவகுருவின் இசை தாகத்தையும் பற்றுதலையுமே காட்டுகின்றது.

'பலே பாண்டியா' படத்தில் சிவாஜி கணேசனும் எம்.ஆர். ராதாவும் பாடுவதாகவரும் 'மாமா மாப்பிளே' பாடல், 'நீயே உனக்கு என்றும் நிகரானவன்.' அப்பாடலை மேடையில் ரசிகர்முன் மாப்பிள்ளை அஷோக் குமாரும் மாமனார் சிவகுருவும் பாடி அமர்க்களப்படுத்தியது சிவகுருவின் இசைக் கற்பனைக்கும் ரசனைக்கும் சான்று.

இந்த இசை நிகழ்ச்சி இவ்வளவு பெரிய வெற்றி பெற கைகொடுத்த ரசிகர்களுக்கும் உதவிய நல்லுள்ளங்களுக்கும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் தமது உளப்பூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் டி.எம்.எஸ். சிவகுரு.